4. அரசினர் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக குழு—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''இந்த அவையின் உறுப்பினர் திரு கே. குப்புசாமி எம்.எல்.ஏ. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக குழுவில் வகித்து வந்த பதவியின் காலம் 30-1-1984 தேதியன்று முடிவடைவதால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக சட்டம் 1971, பிரிவு 18-ன் கீழ் உள்ள உட்பிரிவு (2) இல் அடங்கிய 'ஏனைய இரண்டாம் நிலை உறுப்பினர்கள்,' என்ற தலைப்பின் கீழ் வரும் h) உட்பிரிவின் கீழ் இந்த அவை, அந்த பல்கலைக் கழக நிர்வாக குழுவுக்கு மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் குறிப்பிட்ட நாளன்று இந்த அவையின் உறுப்பினர் களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

(முற்பகல் 10-20)

3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஈ) வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாகக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்தை அவை ஏற்பளித்த தற்கு இணங்க வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 17-2-1984 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20-2-1984 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும் விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21-2-1984 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பெற வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 22—2—1984 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.